முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

Spl.CC 97/2025 ( Spl.CC 4/2014 of CJM Court)

அரசுதரப்பு 26 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கல்யாணசுந்தரம் | வயது | : | 64 |
| தந்தை/ கணவர் பெயர் | : | சிகாமணி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 04.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் புவனகிரி தாலுக்கா, வத்தவராயன்தெத்து கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரில் கிராம நிர்வாக அலுவலகராக இருந்த ஆஜர் 1ஆம் எதிரியான அண்ணாதுரை என்பவரை எனக்குத் தெரியும். எனது தந்தை பெயரில் மேற்படி கிராமத்தில் 2 ஏக்கர் நிலம் இருந்தது. என் அண்ணன் ஹரி கிருஷ்ணன் என்பவர் 1 ஏக்கர் நிலத்தினையும் நான் 1 ஏக்கர் நிலத்தினையும் பயிர் செய்திருந்தோம். கடந்த 2005 ஆம் ஆண்டு எங்கள் ஊரில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டிருந்தது. நான் அப்போது நெல் பயிரிட்டிருந்தேன். எனது நெல் பயிர் பாதித்தது. நஷ்ட ஈடு கணக்கெடுப்பிற்காக ஆஜர்1 ஆம் எதிரி எங்கள் ஊருக்கு வந்து கணக்கு எடுத்தார்.

ஆனால் எனக்கு நிவாரண தொகை எதுவும் வழங்கப்படவில்லை. தர்மலிங்கம் என்பவரிடமிருந்து நான் 18 ஏர்ஸ் நிலத்தினை 1987 ஆம் ஆண்டு விலைக்கு வாங்கியிருந்தேன். அதிலிருந்து இன்றுவரை அந்த நிலத்தில் நான் தான் பயிர் செய்து வருகிறேன். என் நிலத்தின் சர்வே எண்கள் 48/7 B, 47/7 A ஆகும். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.18 ல் பக்கம் 81 ல் என்னுடைய நிலத்திற்கு வேணுகோபால் மகன் தர்மலிங்கம் என்பவருக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஆனால் எங்கள் ஊரில் அந்த பெயரில் யாரும் இல்லை. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை அப்போது விசாரிக்கவில்லை, நான் ஊரில் இல்லை, இப்போதுசம்மன் கொடுக்கும்போது விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

இன்று வரை நான் பயிர் செய்து வரும் நிலம் என் அப்பா பெயரில் தான் உள்ளது. பட்டாவும் என் அப்பா பெயரில் தான் உள்ளது. சாட்சி மாற்றி கூறுகிறார். என் பெயரில் தான் தர்மலிங்கத்திடமிருந்து நான் வாங்கினேன். நானும் என் அண்ணனம் ஆளுக்கு ஒரு ஏக்கர் பங்கு பிரித்து கொண்டது தான் என் அப்பா வாங்கிய நிலம். என் பங்கில் நான் தென்னை மரம் வைத்திருந்தேன். காற்றினால் தென்னை மரங்கள் பாதிப்பானது. நான் தான் பயிர் செய்தேன் என்பதற்கு அடங்கல் தாக்கல் செய்யவில்லை. என் நிலத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்பதும் அதனால் தான் எனக்கு இழப்பீடு வழங்கவில்லை என்பதும், அதனால் தான் நான் அதனை மனதில் வைத்துகொண்டு வி.ஏ.ஓ க்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நிவாரண தொகை சொசைட்டியிலிருந்து நேரடியாக வாங்கினார்கள் என்றால் ஆமாம். வி.ஏ.ஓ, என்ற முறையில் யார் யார் நிலம் பாதிக்கப்பட்டது என்று கணக்கெடுப்பு மட்டும் தான் எடுத்து கொடுத்தார் என்றால் சரியல்ல. நிவாரண தொகையை நிர்ணயம் செய்து பைசல் செய்யும் அதிகாரம் மேல் அதிகாரிக்கு தான் உள்ளது என்றால் சரியல்ல. என் அப்பா வாங்கிய நிலத்தின் சர்வே எண் 47/7 A, 48/7 B, 51 C A ஆகியவை என் அப்பாவின் நிலங்கள்.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

Spl.CC 97/2025 ( Spl.CC 4/2014 of CJM Court)

அரசுதரப்பு 27 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வராசு | வயது | : | 57 |
| தந்தை/ கணவர் பெயர் | : | கோவிந்தராசு | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 04.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் வத்தவராயன் தெத்து கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1 ஆம் எதிரியை எனக்குத் தெரியும். முன்புளங்கள் ஊரில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தார். எங்கள் ஊரில் எனக்கு மூன்றரை ஏக்கர் நிலம் உள்ளது. அது என் அப்பா கோவிந்தராசு பெயரில் உள்ளது. என் அப்பா இறந்துவிட்டார். நான் தான் அந்த நிலங்களை விவசாயம் செய்து வந்தேன். நான் என் நிலத்தில் ஒரு ஏக்கரை இளையராஜா என்பவரிடம் போக்கியம் வைத்து மீட்டுவிட்டேன். அதன் பிறகு இன்றுவரை நிலத்தினை யாருக்கும்போக்கியமோ, குத்தகையோ வைக்கவில்லை. கடந்த 2005 ஆம் ஆண்டு எங்கள் ஊரில் வெள்ள சேதம் ஏற்பட்டது. என் நிலத்தில் நடவு செய்யப்பட்டிருந்த நெல் முற்றிலும் பாதிக்கப்பட்டது.

ஆஜர் எதிரி வி.ஏ.ஓ தான் வந்கு கணக்கு எடுத்தார். எனக்கு வெள்ள நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் மஞ்சக்கொல்லை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி படிவம் 6 வரிசை எண் 275 ல் என்னிடம் ரூ.450/– கொடுக்கப்பட்டதாக கையெழுத்து பெறப்பட்டுள்ளது. அந்த கையெழுத்து என்னுடையது இல்லை. அந்த பக்கம் **அ.சா.ஆ. 22 ஆ**க குறியீடு செய்யப்படுகிறது. அதே போல் தற்போது என்னிடம் காட்டப்படும் வி.ஏ.ஓ. கையொப்பமிட்டு வழங்கிய வரிசை எண் 80 டோக்கனின் பின்புறம் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. அந்த டோக்கன் அது **அ.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. லஞ்ச ஒழிப்பு போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

என் அப்பா பெயரில் இருந்த மூன்றரை ஏக்கர் நிலம் இன்று வரை என் அப்பா பெயரில் தான் உள்ளது. 1 வருடத்திற்கு முன்பு பாகம் பிரித்தோம். அது வரை என் அப்பா பெயரில் பட்டா இருந்தது. என் அப்பா வாங்கிய இடத்தினை தான் இளையராஜா என்பவருக்கு போக்கியத்திற்கு கொடுத்தேன். போக்கியத்தின் போது இளையராஜா தான் பயிர் வைத்தார். இளையராஜாவிடமிருந்து நான் எப்போது மீட்டேன் என்றால் ஞாபகமில்லை. வெள்ள பாதிப்பு வந்த போது இளையராஜா தான் பயிர் வைத்திருந்தார் என்றால் இல்லை. நான் தான் வைத்தேன். போக்கியம் வைத்த ஆவணத்தினை வெள்ள பாதிப்பு ஏற்பட்ட போது காண்பித்தேனா என்றால் வாய் வழியாக தான் போக்கியத்திற்கு கொடுத்திருந்தேன். வி.ஏ.ஓஉடன் தளாரியும் வெள்ள பாதிப்பு கணக்கெடுப்பிற்கு வந்தார்.

மஞ்சக்கொல்லை கூட்டுறவு தொடக்க வேளாண்டை வங்கியில் கணக்கு உள்ளது. எண் 1190 ஆகும். பொதுவாக வங்கியில் யார் பெயரில் கணக்கு உள்ளதோ அவர்கள் கையெழுத்து போட்டால் தான் பணம் கொடுப்பார்கள். நான் ஆங்கிலத்தில் தான் கையெழுத்து செய்வேன். எனது வயலில் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை என்பதும் வி.ஏ.ஓ சரியான முறையில் கணக்கு எடுத்தால் அவர் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயரில் விவசாயம் செய்ததற்கு அடங்கல் கொடுக்கவில்லை. போலிசார் என்னை போன் மூலம் விசாரித்தனர். நேரில் விசாரிக்கவில்லை.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

Spl.CC 97/2025 ( Spl.CC 4/2014 of CJM Court)

அரசுதரப்பு 28 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் | வயது | : | 53 |
| தந்தை/ கணவர் பெயர் | : | சந்திரன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 04.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் வத்தவராயன் தெத்து கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு 3 1/2 ஏக்கர் நிலம் மேற்படி கிராமத்தில் உள்ளது. அதில் நான் தான் பயிர் செய்து வருகிறேன். அந்த நிலத்தினை நான் இதுவரை யாருக்கும் போக்கியமோ, குத்தைகைக்கோ கொடுத்தது இல்லை. கடந்த 2005 ஆம் வருடம் எங்கள் ஊரில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. அப்போது நான் நெல் பயிரிட்டிருந்தேன். எனது பயிர் வெள்ளத்தில் பாதிப்படைந்தது. ஆஜர் எதிரி அண்ணா துரை எங்கள் வயலுக்கு வந்து வெள்ள பாதிப்பு குறித்து கணக்கு எடுத்து சென்றார். எனக்கு வெள்ள நிவாரணம் எதுவும் கொடுக்கப்படவில்லை. என் நிலத்தின் சர்வே எண் 50/4 C2 ஆகும்.

அ.சா.ஆ.18 ல் பக்கம் 83 ல் வரிசை எண் 164 ல் வேணு, த/பெ.காசி என்பவருக்கு ரூ.7125/– நிவாரணம் கொடுத்துள்ளதாக உள்ளது என்றால் அப்படி யாருக்கும் நான் நிலத்தினை போக்கியமோ, குத்தைகைக்கோ கொடுக்கவில்லை. சம்பவ காலத்தில் வழக்கு சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு போலிசார் விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை வெள்ள பாதிப்பிற்கு பிறகு தான் விசாரித்தார்கள். வி.ஏ.ஓ கணக்கு எடுத்த பிறகு எத்தனை நாட்களுக்கு பிறகு என்று ஞாபகமில்லை. வி.ஏ.ஓ உடன் தளாரியும் கணக்கெடுக்க வந்தார். எனக்கு 6 ஏக்கர் நிலம் இல்லை, 3 ஏக்கர் தான் உள்ளது. சர்வே எண் 50/4 C2 ல் 17 ஏர்ஸ் நிலம். ரூ.7125/– வேணு, த/பெ.காசி என்பவருக்கு கொடுத்தது பற்றி எனக்கே தெரியாது. ஆனால் வாங்கிவிட்டார், அது போல் பெயரில் எங்கள் ஊரில் ஆள் இல்லை. எனக்கு நிவாரண தொகை எழுதாததால் போலிசார் சொல்லிக்கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கணக்கு உள்ளதா என்றால் 2010 க்கு பிறகு தான் உள்ளது. அதற்கு முன்பு இல்லை.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

Spl.CC 97/2025 ( Spl.CC 4/2014 of CJM Court)

அரசுதரப்பு 29 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கவியரசன் | வயது | : | 59 |
| தந்தை/ கணவர் பெயர் | : | சந்திரன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 04.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் வத்தராயன்தெத்து கிராமத்தில் வசித்து வருகிறேன். ஜவுளிக்கடையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1 ஆம் எதிரியை தெரியும். எனக்கு வத்தவராயன் தெத்து கிராமத்தில் 2 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் நான் தான் பயிர் செய்து வருகிறேன். நெல் பயிரிட்டு வந்தேன். 2005 ல் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. என் பயிர் பாதிப்படைந்தது. வி.ஏ.ஓ அண்ணாதுரை வந்த கணக்கு எடுத்து சென்றார். எனது நிலத்தினை இதுவரை யாருக்கும் குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ விட்டதில்லை. வெள்ள நிவாரண தொகை எனக்கு வழங்கப்படவில்லை. என் நிலத்தின் சர்வே எண்கள் 50/5C, 50/5A ஆகும்.

மேற்படி சர்வே எண்களுக்கு சிங்காரவேல், த/பெ. பிச்சை பிள்ளை என்பவருக்கு வெள்ள நிவாரணமாக ரூ.7500/– கொடுக்கப்பட்டதாக அ.சா.ஆ.18 ல் பக்கம் 85 ல் உள்ளது என்றால் அது போல் பெயரில் எங்கள் ஊரில் யாரும் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு போலிசார் விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துளளேன். தற்போதும் நான் தான் அந்த நிலத்தில் பயிர் செய்கிறேன். வெள்ளபாதிப்பு கணக்கெடுப்பின் போது அடங்கல் கொடுக்கவில்லை. அடங்கலை பார்த்தால் தான் யார் பயிர் வைத்துள்ளார் என்று தெரியும். இந்த இடத்தினை தவிர வேறு இடம் உள்ளது. அந்த நிலத்தினையும் நான் குத்தகைக்கு கொடுக்கவில்லை. கிராமத்தில் வாய்வழியாக போக்கியத்திற்கு விடும் பழக்கம் உள்ளது என்றால் ஆமாம். எனக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கணக்கு உள்ளது. நிவாரண தொகை வங்கி கணக்கின் மூலம் தான் கொடுத்து நேரடியாக வாங்கினார்கள் என்றால் ஆமாம். வெள்ள பாதிப்பு ஏற்பட்ட போது நான் நிலத்தினை குத்தகை கொடுத்திருந்தேன் என்பதும், குத்தகை தாரர் தான் நிவாரண தொகையை வாங்கினார் என்பதும் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

Spl.CC 97/2025 ( Spl.CC 4/2014 of CJM Court)

அரசுதரப்பு 30 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெருமாள் | வயது | : | 59 |
| தந்தை/ கணவர் பெயர் | : | தனசேகரன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 04.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் வத்தவராயன் தெத்து கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 1 ஆம் எதிரி அண்ணாதுரை என்பவரை தெரியும். எனக்கு என் ஊரில் 2 – 3/4 ஏக்கர் நிலம் உள்ளது. அது என் அப்பா தனசேகரன் பெயரில் உள்ளது. அதில் நெல் பயிரிட்டோம். 2005 ல் எங்கள் ஊரில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. என் நிலத்தில் பயிரிட்டிருந்த நெல் பாதிப்படைந்தது. ஆஜர் எதிரி அண்ணாதுரை வி.ஏ.ஓ, வந்து பாதிப்பு கணக்கு எடுத்து சென்றார். வெள்ள பாதிப்பு நிவாரண தொகை என் அப்பா தனசேகரனுக்கு ரூ.5100/– கொடுத்தார்கள். குறிப்பாக எவ்வளவு என்று தெரியவில்லை. எனக்கு எந்த நிவாரணமும் கொடுக்கவில்லை.

தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.21 ல் பக்கம் எண் 55 ல் வரிசை எண் 266 ல் ரூ.5625/- தனசேகரன் என்பவருக்கு கொடுக்கப்பட்டதாக உள்ளது. அதிலுள்ள கையெழுத்து என் தந்தையுடையது தான். அதே புத்தகத்தில் வரிசை எண் 282ல் 1500/- எனக்கு கொடுத்ததாக உள்ளது, அதிலுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. நான் ஆங்கிலத்தில் தான் கையெழுத்து போடுவேன். அந்த பதிவு அ.சா.ஆ. 24 . என் தந்தை நிலத்தின் சர்வே எண் தெரியாது. என் அப்பா பெயரில் உள்ள நிலத்திற்கு குமாரசாமி மகன் பழனிவேல் என்பவருக்கு நிவாரணை தொகை வழங்கப்பட்டதாக அ.சா.ஆ.18 ல் குறிப்பு உள்ளது. அது போல் எந்த நபரும் எங்கள் ஊரில் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் பெயரில் நிலம் இல்லை. என் அப்பா பெயரில் தான் உள்ளது. நிலம் என் பெயரில் இல்லாததால் என்பெயரில் சொசைட்டி கணக்கு இல்லை. போலிசார் கொடுத்த சம்மனில் கையெழுத்து போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும சம்மனில் உள்ள கையெழுத்தினை தமிழில் தான் போட்டுள்ளேன். அது **எ.த.சா.ஆ.2** ஆகும். தற்போது தமிழில் கையெழுத்து போடுவேன், முன்பு ஆங்கிலத்தில் போடுவேன். போலிசார் என்னை ஒரு வாரத்திற்கு முன்பு விசாரித்தனர். சாட்சி சொல்ல போலிசார் சொல்லிக்கொடுத்தனர் என்றால் ஆமாம். போலிசார் சொல்லிக்கொடுத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.என் அப்பா நிவாரணம் வாங்கினார். எங்கள் ஊரிலும் நிறைய பேர் நிவாரணம் வாங்கியுள்ளார்கள்.

நிவாரணம் கிடைக்காதவர்கள் நிவாரணத்திற்காக போராடினார்கள் என்றால் ஆமாம். அவர்களுடன் நானும் நிவாரணம் கேட்டு போராடினேன் என்றால் ஆமாம்.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

Spl.CC 97/2025 ( Spl.CC 4/2014 of CJM Court)

அரசுதரப்பு 31 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஜயகுமார் | வயது | : | 50 |
| தந்தை/ கணவர் பெயர் | : | ராதா | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 04.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் வத்தவராயன் தெத்து கிராமத்தில் வசித்து தினக்கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1 ஆம் எதிரி அண்ணாதுரை என்பவரை தெரியும். எனக்கு என் ஊரில் நிலம் எதுவும் இல்லை. வேறு யார் நிலத்திலும் நான் போக்கியத்திற்கோ, குத்தகைக்கோ பயிர் வைக்கவில்லை. 2005 ல் எங்கள் ஊரில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. எனக்கு வெள்ள நிவாரணத் தொகை எதுவும் கொடுக்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.21 ல் பக்கம் எண் 33 ல் வரிசை எண் 154 ல் ரூ.975 /– என் பெயரில் வழங்கப்பட்டதாக குறிப்பு உள்ளது. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. அந்த குறிப்பு **அ. சா.ஆ. 25**

அதே போல் என்னிடம் காட்டப்படும் கிராம நிர்வாக அலுவலர் கையெழுத்திட்டு கொடுத்த வரிசை எண் 212 டோக்கனின் பின்புறம் உள்ளது என் கையெழுத்து இல்லை. அது **அ.சா.ஆ–26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நிலம் எதுவும் இல்லை, நான் எந்த நிலத்தினையும் போக்கியம் எடுத்து பயிர் செய்யவில்லை. நான் போக்கியத்திற்கு எடுத்து நிவாரணம் பெற்றுக்கொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் 1 ஆம் எதிரி என்னை எதுவும் விசாரிக்கவில்லை. எனக்கு நிலம் இல்லாததால் கூட்டுறவு வங்கியில் கணக்கு இல்லை. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

Spl.CC 97/2025 ( Spl.CC 4/2014 of CJM Court)

அரசுதரப்பு 32 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மேகலைவன் | வயது | : | 51 |
| தந்தை/ கணவர் பெயர் | : | மகாலிங்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 04.02.2026ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் வாண்டையாங்குப்பம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். 1ஆம் எதிரி அண்ணாதுரையை தெரியும். வத்தவராயன் தெத்து கிராமத்தில் என் அம்மா ராஜவள்ளி பெயரில் மூன்றரை ஏக்கர் நிலம் உள்ளது. அதில் நெல் பயிரிடுவோம். 2005 ஆம் ஆண்டு எங்கள் ஊரில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது எங்கள் நிலத்தில் பயிர் செய்திருந்த நெல் பாதிப்படைந்தது. ஆஜர் எதிரி அண்ணாதுரை வந்து கணக்கு எடுத்து சென்றார். என் அம்மா ராஜவள்ளிக்கு ரூ.3750/– வெள்ள நிவாரணமாக வழங்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.20 ல் பக்கம் 59 ல் வரிசை எண் 258 ல் உள்ள கையெழுத்து என் அம்மாவுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ. 27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

எங்கள் நிலத்தினை யாருக்கும் குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ நாங்கள் விடவில்லை. எங்கள் நிலத்திற்கு பானுமதி, க/பெ. ராமசாமி என்பவர் நிவாரண தொகை பெற்றதாக குறிப்பு உள்ளது. நாங்கள் அது போல் யாருக்கும் குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ நாங்கள் விடவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு போலிசார் என்னை விசாரித்தனர்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் அம்மா பெயரில் உள்ள நிலத்தின் சர்வே எண் 27/13 B ஆகும். என் அம்மா பெயரில் தான் நிவாரணம் கொடுத்தார்கள். என் நிலத்திற்கு நாங்கள் நிவாரணம் வாங்கிக்கொண்டோம். பானுமதி க/பெ. ராமசாமி என்பவர் கூட்டுபட்டாவில் உள்ளார் என்றால் ஆமாம். யார் நிலம் பயிர் வைக்கிறார்களோ அவர்களுக்கு தான் அடங்கல் கொடுப்பார்கள் என்றால் ஆமாம். அடங்கலில் பெயர் உள்ளவர்களுக்கு தான் நிவாரணம் கொடுப்பார்கள். பானுமதியும் பயிர் வைத்தார் என்றால் ஆமாம்.